*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **26 ஜூலை 2026**

# <u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரி வாஸ்கோ அமைப்பு சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கடற்கரை சாலை காந்தி சிலை அருகில் இன்று (26.07.2026) நடைபெற்றது. நிகழ்ச்சியில், இளைஞர்கள் முதியவர்கள் என்று பலரும் கலந்து கொண்ட விழிப்புணர்வு மராத்தான் ஓட்டத்தை மாண்புமிகு துணை நிலை ஆளுநர் திரு. K. கைலாஷ்நாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து போதைப்பொருள் ஒழிப்பு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். மாண்புமிகு அமைச்சர் திரு P. ராஜவேலு உடன் இருந்தார்.

நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர், தான் தன்னுடைய உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள தினமும் சிறிது நேரம் உடற்பயிற்சி செய்வதாக தெரிவித்தார்.